5th March 1955]

Sri N. K. PALANISAMY :—" அதனுடைய ரிப்போர்ட் ஜூலை மாதத்திலேயே சர்க்காருக்கு வந்துவிட்டது. ஆனால் ஜனவரி மாதத்தில்தான் அதை பப்ளிஷ் செய்திருக்கிறார்கள். சட்டப்படி ரிப்போர்ட் வந்தவுடன் அதை பப்ளிஷ் செய்யவேண்டும். ஆறு மாதங்கள் ஏன் தாமதம் என்று கேட்கிறேன் ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் சட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்தி பேசுவதற்கு இடம் இல்லை. அவார்ட் பப்ளிஷ் பண்ணும் சட்டத்தைப்பற்றி அவர் தவறாக நினைத்து அப்படிச் சொல்லுகிறார். பல மாதங்கள் கழித்து அது வந்தாலும் ஒரு பெரிய ரிப்போர்ட்டாக வந்திருக்கிறது, அதன் விலை ரூ. 3-2-0. அதை அச்சடித்து எவ்வளவு சீக்கிரமாக பிரசுரிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அதை பிரசுரித்திருக்கிறார்கள்."

Sri S. RAMALINGAM :—" முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசுகளை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவர முடியாத நிலைமையில் இருப்பதால் நம்முடைய தொழில் தகராறுகளை தீர்ப்பதற்கும் மாகாணத்தில் அதற்கான ஒரு சட்டம் செய்வதற்கும் சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு நாட்கள் இம்மாதிரி சட்டம் கொண்டுவரலாம் என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" மத்திய அரசாங்கம் இப்பொழுது இருக்கும் தொழில் தகராறுகளை தீர்த்து வைப்பதற்கு யோசித்துக்கொண்டும் ஏற்பாடு செய்துகொண்டுமிருக்கிறார்கள். அதைப்பற்றி சட்டம் ஒன்று சீக்கிரத்தில் வரும் என்று எதிர்பாக்கிறேன். மத்தியஸ்தர்களுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்ற யோசனையும் அதில் இருக்கும் என்று நினைக்கிறேன். முக்கூட்டு கமிட்டிகளின் சிபாரிசுகளை நிறைவேற்றுவது எப்படி என்பதை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி கனம் அங்கத்தினருக்கு சொல்லவேண்டியதாக இருக்கிறது."

Sri V. R. NAGARAJAN :—" May I know what the articles are that are manufactured by minor engineering industries? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" It must be a very long list and I am afraid I cannot give it now."

Shutter for Chirandathoor Canal

* 1112 *Q.*—Sri K. MOIDU : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have any proposal to provide a shutter for 'Chirandathoor Canal' at Maniyoor?

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" The Government have deleted the scheme, after due examination, from the Special Minor Irrigation Programme."

Amalgamation of Harijan hostels

* 1113 *Q.*—Sri V. MUTHU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the Government are subsidizing more than one hostel, in the same panchayat area in the State, intended for the students of Harijan Community or Backward Classes; and

[5th March 1955

(*b*) if so, whether the Government have any proposal to amalgamate all such hostels in the same area under one efficient management?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) Yes, Sir."

" (*b*) No, Sir."

SRI V. MUTHU :—" ஹரிஜன ஹாஸ்டல்களில் ஹரிஜனப் பிள்ளைகளோடு பிற்பட்ட வகுப்புப் பிள்ளைகளையும் சேர்க்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. பிற்பட்ட வகுப்பு ஹாஸ்டல்களில் ஹரிஜனப் பிள்ளைகளை சேர்ப்பதற்கும் விதி இருக்கிறது. இரண்டு ஹாஸ்டல்களுக்கும் கிராண்ட் கொடுப்பது என்று இருக்கிறது. ஒரே ஏரியாவில் பல ஹாஸ்டல்கள் இருந்தால் அவைகளை ஒன்றாகச் சேர்க்கவேண்டும். அவ்விதம் ஒன்றாகச் சேர்த்து நடத்துவதற்கு மானேஜ்மெண்டார் இருந்தால் அவைகளை ஒன்றாகச் சேர்க்கக்கூடாதா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" பிற்பட்ட வகுப்பினருக்கும் ஹரிஜனப் பிள்ளைகளுக்கும் தனித் தனியாக ஹாஸ்டல்கள் இருக்கின்றன. அவைகளை ஒன்றாகச் சேர்ப்பதற்கு சில இடங்களில் முடியும், சில இடங்களில் முடியாமல் இருக்கிறது. ஆதலால் அந்தந்த இடத்தைப் பொருத்து இருக்கிறது ஒன்றாக சேர்ப்பது என்பது."

SRI S. THINAKARASAMI THEVAR :—" தனித் தனியாக ஹாஸ்டல் அமைந்திருப்பதால் அவைகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. அம்மாதிரி இல்லாமல் சேர்த்து நடத்துவது என்பது உண்மையிலேயே நிர்வாகத்தினருடைய திறமை குறையும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகையால் இம்மாதிரியான புதிய முறையைக் கையாளாமல் இருக்க அரசாங்கம் உறுதி சொல்லுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" அங்கத்தினர்களிடையே அபிப்பிராய பேதம் இருப்பதால் அதை ஆலோசனை செய்துதான் தீர்ப்புக் கூற முடியும்."

SRI P. G. MANICKAM :—" பிற்பட்ட இனத்தவர்களுடைய ஹாஸ்டல்களில் ஹரிஜனங்களைச் சேர்க்க வேண்டுமென்று ஹரிஜனங்கள் விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவ்விதம் விண்ணப்பம் செய்துகொண்டாலும் அவர்களை சேர்க்கமாட்டேன் என்கிறார்கள். அவர்களை சேர்க்கும்படி ஒரு சட்டத்தை விதிக்க சர்க்கார் முன் வருவார்களா ?"

MR. SPEAKER :—" நீங்கள் மறுபடியும் கேளுங்கள்."

SRI P. G. MANICKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஹாஸ்டல்களில் சேர்க்க வேண்டுமென்று ஹரிஜனங்கள் விண்ணப்பம் போட்டாலும் அவர்களுக்கு இடம் கிடைப்பது இல்லை. இப்படி பல கேஸ்கள் கோயமுத்தூரில் இருக்கின்றன. அதனால் ஹரிஜனங்களை ஹாஸ்டல்களில் சேர்க்க வேண்டும் என்று விண்ணப்பம் போட்டால் அவர்களைச் சேர்க்கவேண்டும் என்று ஒரு உத்தரவு பிரப்பிப்பார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" யார் மனுப் போட்டாலும் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்த அரசாங்கம் தகுதி வாய்ந்தவர்களாக இல்லை. ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அநேக மாணவர்களுக்கு இடம் வசதி செய்து கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இன்னும் அதிகமாக கொடுப்பதற்கு போதிய பணம் இல்லை. இடமும் இல்லை. அதனால் அவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க அரசாங்கத்தாரால் முடியாமல் இருக்கிறது. எந்த வசதியையாவது கொடுக்க அரசாங்கம் முன் வருவார்கள்."

5th March 1955]

SRI S. JAYARAMA REDDIAR :—" இந்த ஹாஸ்டல் தொழிலை நடத்துவது ஒரு லாபகரமான தொழிலாக இருப்பதால் பல ஹாஸ்டல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதை விட்டு நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அந்த மாதிரி அதிகமாக ஏற்படாது என்பது சர்க்காருக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI B. PARAMESWARAN :—"சர்க்காருக்கு சில புகார்கள் வந்திருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்வதற்கு தனியாக ஸ்பெஷல் ஆபீசரை போடுவதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறார்கள்."

SRI V. S. SIVAPRAKASAM :—" ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு பிற்பட்ட வகுப்பாருடைய உறவு மிக மிக அவசியமாக இருக்கிறது. அதனால் எந்தெந்த இடங்களில் இந்த இரண்டு இனத்தவர்களுக்கு தனித் தனியாக ஹாஸ்டல்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் ஒரே ஹாஸ்டலை அமைப்பதற்கும் அதன் மூலம் இரு சமூகப் பிள்ளைகள் உறவாய் இருப்பதற்கும் சர்க்கார் ஆதரவு கொடுக்க முன்வருவார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" சில ஹாஸ்டல்களில் அப்படி செய்திருக்கிறார்கள். ஹரிஜன ஹாஸ்டல்களில் பத்துப் பேர்கள் ஹரிஜனங்களாக இருந்தால் இரண்டு பேர்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அதேபோல் பிற்பட்ட வகுப்பினரின் ஹாஸ்டலாக இருந்தால் அதில் இரண்டு ஹரிஜனங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. அப்படியே இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. மற்றும் அவர்கள் இரண்டு பேர்களை ஒன்றாகச் சேர்த்து சகோதரர்களாக வாழ்வதற்கு அதிகப்படியான ஏற்பாடுகள் நடந்து கொண்டு வருகின்றன. அதைப் பற்றி நாங்களும் கவனித்து வருகிறோம். அவர்களை ஒன்றாகச் சேர்த்து, முக்கியமான பிரச்னைகள் அவர்களுக்கு ஒன்றாக இருப்பதால், அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முடிகிறதா என்றும் ஹாஸ்டல்கள் சரியாக நடக்கிறதா என்றும் பார்த்து இருக்கும் பிரச்னைகளைத் தீர்க்க சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்."

SRI G. GOVINDAN :—" இப்பொழுது ஹரிஜனங்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் ஹாஸ்டல்களை அமைத்துக்கொண்டு வருகிறார்கள். நரிக்குறவர்களும் இருளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு படிப்பு கிடையாது. அவர்களுக்கும் ஹாஸ்டல்களை அமைத்து படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ? "

MR. SPEAKER :—" கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்க வேண்டும்."

SRI S. ARUMUGAM PILLAI :—" கனம் மந்திரி அவர்கள் 9-10
பதில் சொல்லும்போது அநேகம் பிள்ளைகள் படிப்பதற்கு வசதி செய்ய a.m.
முடியவில்லை என்றும் பணம் இல்லை என்றும் சொன்னார். எல்லா பிள்ளைகளையும் எல்லா ஹாஸ்டல்களிலும் சேர்த்து அவர்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI B. PARAMESWARAN :—" ஒவ்வொரு வருஷமும் 100-க்கு 20 பிள்ளைகளை அதிகமாக சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதனால் அதிகப்படியாக அரசாங்கம் பணம் கொடுக்கும்படியான நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஹாஸ்டல்கள் நன்றாக நடப்பதை கவனிக்கவேண்டியதாகவும் இருக்கிறது. அதிகப்படியாக சேர்த்துக்கொள்வதால் ஹாஸ்டல்கள் சரியாக நடைபெறவில்லை என்று கனம் அங்கத்தினர்களே புகார் சொல்லுகிறார்கள். அவ்விதம் புகார் இல்லாமல் ஹாஸ்டல்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்."

SRI P. VENKATESHA SHOLAGAR :—" இவ்விதம் இரண்டுவித இனத்தவர்களை சேர்ப்பதில் அங்கத்தினர்களிடையே அபிப்பிராய பேதம் இருக்கிறது. அதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். சில

ஹாஸ்டல்களில் சில பிள்ளைகளை சேர்க்கவில்லை. சில ஹாஸ்டல்களில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஹரிஜன ஹாஸ்டல்களில் இரண்டு இனத்தவர்களையும் சேர்த்துக்கொள்வதில் ஆபத்து இருப்பதால் மூன்றில் ஒரு பகுதியை சேர்த்துக்கொண்டு அவர்கள் அதிகமாக பழகுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பார்களா ? அதைப்போலவே அதிகப்படியான பிற்பட்ட இனத்தவர்களையும் சேர்க்க மந்திரி அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்."

THE HON. SRI B. PARAMESWARAN :—" இந்த பிரச்னையை தீர்ப்பது கடினமானது. பிற்பட்ட இனத்தவர்களிலும் அதிகம் உயர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஆகையினால் திட்டவட்டமாக சட்டம் இயற்றப்போகிறோம். அதை மே மாதம் பிரசுரிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது."

SRI B. K. NALLASAMI :—" How many M.L.As. are conducting Harijan hostels? "

MR. SPEAKER :—" The hon. Member may give notice of a separate question."

National Extension Service Scheme for Udaiyarpalayam

* 1114 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Udaiyarpalayam taluk in Tiruchirappalli district has been included in the National Extension Service Scheme; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) No, Sir.

" (*b*) There is no particular reason for not including this area under the National Extension Service. The whole State is expected to be covered by the National Extension Service Scheme by the end of the Second Five-Year Plan. So, the taluk in question will be included in its turn."

SRI K. R. VISWANATHAN :—" In view of the fact that this taluk is a very backward area, will the Government consider the question of including it in the list of 36 Blocks proposed to be opened in the coming year under the National Extension Service Scheme? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I am sorry that I cannot give an assurance to the hon. Member at this stage. But I may tell him that we will certainly take the condition of this taluk into consideration before we decide on further extension."

SRI MOHAMED SALIH MARAIKAYAR :—" அரந்தாங்கி தாலூகா எல்லா வகைகளிலும் புறக்கணிக்கப்பட்டு, ரொம்ப பிற்போக்கான நிலையில் இருப்பதால் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை அங்கு விஸ்தரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I shall repeat the same answer."